[2007 அக்டோபர் 18

4—

கட்டட வசதி

***10558—திரு. இரா. விசுவநாதன்:**

மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நத்தம் தொகுதி, நத்தம் நகரில் வாடகைக் கட்டடத்தில் இயங்கிவரும் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றங்களுக்குப் புதிய கட்டடம் கட்டித்தர அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நத்தம் தொகுதி, நத்தம் நகரில் வாடகைக் கட்டடத்தில் இயங்கிவரும் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றங்களுக்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு நிலம் தேர்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. நிலம் தேர்வு செய்யப்பட்ட பின்பு கட்டடம் கட்டுவது சம்பந்தமாகப் பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. விசுவநாதன் இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. பத்மாவதி.

திருமதி பி. பத்மாவதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நன்னிலம் தொகுதியில் உள்ள நன்னிலம் நகரில், நீண்ட நாள் கோரிக்கையாக இருக்கின்ற, வாடகைக் கட்டடத்தில் இயங்கிவருகின்ற நீதிமன்றத்திற்குப் புதிய கட்டடம் அமைக்கும் கோரிக்கையை நிறைவேற்ற அரசு முன்வருமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கையில் 19 இடங்களில், நீதிமன்றங்கள் தொடங்குவதற்கும் கட்டடங்கள் கட்டுவதற்கும் இந்த அவையிலே நான் ஒரு பட்டியலைப் படித்து இருக்கிறேன். புதிதாக, உறுப்பினர் அளித்த கோரிக்கை முறைப்படி

2007 அக்டோபர் 18]

உயர் நீதிமன்றத்திலிருந்து எங்களுக்கு வருமானால், அதுகுறித்து அரசு பரிசீலனை செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் செல்வி ஆ. அங்கையற்கண்ணி.

செல்வி ஆ. அங்கையற்கண்ணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங்கராபுரம் தொகுதியில் 1996–2001-ல் குற்றவியல் நீதிமன்றம் நமது கழக ஆட்சியில்தான் அமைக்கப்பட்டுள்ளது. இப்போது வாடகைக் கட்டடத்தில்தான் இயங்கி வருகிறது. நீதிமன்றத்திற்குத் தேவையான இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. அங்கு அரசு புதிய கட்டடம் கட்டித்தர முன்வருமா என்று தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: பொதுவாக நாம் சென்ற முறை நிதிநிலை அறிக்கையிலே சொன்னோம்; இப்படி கட்டடங்கள் இல்லாமல் இருக்கின்ற நீதிமன்றங்களுக்கெல்லாம் கட்டடம் கட்டுவதற்கு, ஒரு திட்டத்தைத் தயாரித்து அதற்காக அரசு ரூ.300 கோடி வழங்கும் என்று தெரிவித்தோம். அதன் அடிப்படையில், ஒவ்வோர் ஆண்டும் இவ்வளவு பணம் ஒதுக்கப்படும் என்ற வகையில், 2007–2008-ல் நீதிமன்றங்களுக்குக் கட்டடங்கள் கட்டுவதற்காக ரூ.100 கோடி ஒதுக்கி இருக்கிறோம். அந்த 19 இடங்களில் கட்டடங்கள் கட்டப்படும். அடுத்தடுத்த ஆண்டுகளில் வருகிறபோது, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்தக் கோரிக்கைகளையெல்லாம் நாங்கள் எடுத்துக்கொள்வோம்.

அதுமட்டுமல்லாமல், மத்திய அரசு மாநில அரசிடம் ஒரு Prospective Plan (தொலைநோக்குத் திட்டம்) தயாரித்து நீதிமன்றங்களுக்குக் கட்டடம் கட்டுவது குறித்து ஓர் அறிக்கை அனுப்பும்படி கேட்டது. தமிழக அரசு அதையும் சிந்தித்து, எந்தெந்த இடங்களில் நீதிமன்றங்களுக்குக் கட்டடம் கட்ட வேண்டும் என்றெல்லாம் திட்டம் தீட்டி, ரூ.213.15 கோடியில் ஒரு திட்டத்தைத் தயாரித்து மத்திய அரசுக்கு அனுப்பி இருக்கிறோம். அதற்கும் விரைவில் நாங்கள் அனுமதி எதிர்பார்த்துக்கொண்டு இருக்கிறோம். மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் இங்கே ரூ.300 கோடி ஒதுக்குவதாக வாக்களித்திருக்கிறார்கள். அப்படி அனுமதி வருமானால், மத்திய அரசு தருகின்ற அந்த

ரூ. 213.15 கோடியும் சேர்த்தால், கிட்டத்தட்ட ரூ.500 கோடியில், வருகிற 4 ஆண்டுகளுக்குள்ளாக, தமிழ்நாட்டில் இருக்கின்ற எல்லா நீதிமன்றங்களுக்கும் கட்டடம் கட்டி முடிக்கப்படும் ஒன்றை நான் உறுதியாகத் தெரிவிக்கிறேன் இந்த மன்றத்தில். எத்தனையோ ஆண்டு காலமாக நீதிமன்றங்களுக்குக் கட்டடங்கள் இல்லை. ஆனால், கலைஞருடைய காலத்திலேதான் தமிழ்நாட்டில் இருக்கிற அவ்வளவு நீதிமன்றங்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) புதிய கட்டடங்கள் வரப்போகின்றன என்பதைப் பெருமையோடு தெரிவிக்கிறேன். முடியும் என்ற நம்பிக்கையோடு தெரிவிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 5, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

5—

எரிவாயுப் பேருந்து

***17019—திரு. கோவை தங்கம்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை மற்றும் கோயம்புத்தூரில் இயங்கும் பேருந்துகளை எரிவாயுமூலம் இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) எரிவாயு நிரப்பும் வசதிகள் ஏற்படுத்தப்பட்டவுடன் எரிவாயுமூலம் பேருந்துகள் இயக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம்.

முற்பகல் 10—00

திரு. கோவை தங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலில் நான் வால்பாறைக்கும், கோவை மாவட்டத்திற்கும் புதிய பேருந்துகளை அதிகமாக வழங்கிய நம்முடைய மாண்புமிகு தமிழக